கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண். 334/2020 வா.சா. 2 செல்வி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 12.08.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. இவ்வழக்கில் சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 6 -ம் வகுப்பு படித்துள்ளேன். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் யார் சொல்லி தயார் செய்தது என்றால் தங்கராஜ் சொல்லி தயார் செய்தது. நான் குடியிருப்பது உடுமலை தாலுக்கா வடபூதிநத்தம் கிராமம் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் இடத்திற்கும் என் சகோதரர் வாதி தங்கராஜ் குடியிருக்கும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 45 km இருக்கும். இவ்வழக்கை யார் யாருக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2. வாதி வசிக்கும் நிலத்தின் புல எண் , பரப்பளவு , நான்கு எல்லை தெரியுமா என்றால் தெரியும் . வாதி புது வீடு கட்டியதாக நான் சொல்லியுள்ள நிலையில் அது எப்போது கட்டப்பட்டது என்று தெரியுமா என்றால் 2014 -ல் கட்டப்பட்டது. வாதி முதலில் கூரை வீட்டில் வசித்து பின்னர் அதனை அகற்றி தான் தார்சு வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். வாதி வீட்டின் வடபுற சுவரை வடபுற எல்லை ஒட்டியே கட்டியுள்ளார் என்றால் சரியல்ல . 4 1/2 அடி இடைவெளி விட்டே கட்டியுள்ளார். வாதி வீட்டிற்கும் பிரதிவாதி வீட்டிற்கும் எவ்வளவு இடைவெளி உள்ளதென்றால் 4 1/2 அடி உள்ளது. வாதி தன்வீட்டை வடபுற எல்லையில் இடைவெளி விடாமல் கட்டிவிட்டு பிரதிவாதியின் இடத்தை ஆக்கிரமிக்கவே இவ்வழக்கை தாக்கல்

செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வாதிக்காக பிரதிவாதியிடம் பேசியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்திற்கு அருகில் வசிக்காததால் எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் வாதி என் சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**ஒப்பம் /- ( M.S.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி